# 'ராவ்' அரசு தப்பியது; வாக்கெடுப்பு தோல்வி

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் அரசுக்கு எதிராக நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற நம்பிக்கையில்லாப் பிரேரணை 14 வாக்குகளால் தோல்வி அடைந்தது. நடந்த மூன்று நாட்களாக

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 13 இதழ் 162
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 29 — 07 — 1993

## ராவை காப்பாற்றிய சுப்பிரமணியசுவாமி

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் அரசு நேற்று நடைபெற்ற நம்பிக்கையில்லா பிரேரணை வாக்கெடுப்பில் வெற்றிபெற தமிழக தமிழரான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி பெரிதும் உதவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2ம் பக்கம் பார்க்க)

## யுத்தக் கைதிகள் இன்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகள் 33 பேரும் இன்று காலை 10 மணிக்கு மீண்டும் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கின்றார்கள்.

உண்ணாவிரதம் மேற்கொள்ளும் யுத்தக் கைதிகளில் ஒரு

(4-ம் பக்கம்

★ மீண்டும் ஒரு அதிர்ச்சி

# திருமலையில் புலிகள் அதிரடி

# ஆறு படையினர் உயிரிழப்பு

## ஆயுதங்கள் பலவும் மீட்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதல் ஒன்றில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல நவீனரக ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## உடுகம்பொலவிற்கு புதிய பதவி கிடைத்தது

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபரும் சர்ச்சைக்குரிய வருமான பிரேமதாஸா உடுகம்பொல இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் பிரதித் தலைவராக நேற்று நியமிக்கப்பட்டார்.

இவருக்கான நியமனத்தை நேற்று துறைமுகங்களுக்கான அமைச்சர் திரு. அலிக் அலுவிகார வழங்கினார்.

இவருக்கு இப்பதவி வழங்கப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தலாமெனவும் கூறப்படுகிறது. (இ)

## யாழ்.குடா படைத் தளபதிகள் பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

யாழ். குடாவிலுள்ள படை முகாம்களைச் சேர்ந்த படைத் தளபதிகள் அண்மையில் ரணில் விக்கிரமசிங்காவுடன் முக்கிய சந்திப்பொன்றை நடாத்தியுள்ளனர். இதில் பல விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளனர்.

இச்சந்திப்பின் போது அப்படைத்தளபதிகள் மற்றும் படை உயரதிகாரிகள் மத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினர். அவர் தமது உரையில்;

(2-ம் பக்கம் பார்க்க)

ராஜினாமா கடிதம் விவகாரம்:

## குற்றச்சாட்டிற்கு ஜே. ஆர். மறுப்பு!

(கொழும்பு)

ஆட்சியைக் கவிழ்ப்பார்கள் என்ற பயத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தன தனது ஆட்சிக்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து முன் ஏற்பாடாக இராஜினாமாக்

(2-ம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களை நோக்கி இலங்கை கடற்படையினர் சூடு

### மூவர் படுகாயம்; படகுகள் சேதம்

(சென்னை)

இராமேஸ்வரத்திலிருந்து கச்சதீவு அருகே நேற்று முன்தினம் மாலை மீன்பிடிக்கச் சென்ற இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் சரமாரியாகச் சுட்டதில் மூன்று மீனவர் படுகாயமடைந்தனர். ஒருவரது நிலை கவலைக்கிடமாயுள்ளது. படகுகளும் பலத்த சேதமடைந்தது.

இதையடுத்து இப்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த ஏனைய மீனவர்கள் தப்பிச் சென்றுவிட்டனராம். இச்சம்பவம் குறித்து தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

(2ம்பக்கம் பார்க்க)

## படையினர் சடலங்களை புலிகள் ஒப்படைக்கவில்லை?

(கொழும்பு)

மணலாறு தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரில் 18 பேரின் சடலங்களையும், புலிகள் இராணுவத்திடம் ஒப்படைக்கவில்லை என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக 'வெரித்தாஸ்' கூறியது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி-பூநகரி படகுச்சேவை இன்று வியாழக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர். (சி)

வலிகாமத்தில்

## ஹெலியிலிருந்து சூடு முகாமிலிருந்து ஷெல் வீச்சு

(பண்டத்தரிப்பு)

நேற்றுக் காலை ஆறு மணியளவில் தெல்லிப்பழை, மல்லாகம், அளவெட்டி ஆகிய பகுதிகளின் ரோந்தில் ஈடுபட்ட ஹெலிக்கொப்டர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தது

பெரியவிளான், பண்டத்

(2-ம் பக்கம் பார்க்க)

## பல முகாம்களுக்கு மேலதிக படையினர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ள பல படை முகாம்களுக்கு மேலதிகமாக படையினர் அனுப்பப்பட்டுவருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

புலிகளின் திடீர்த் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதை அடுத்துப் படை முகாம்கள் பலப்படுத்தப்பட்டு, பாதுகாப்பு அதிகரித்து வருவதுடன், மேலதிகப் படையினரும் அனுப்பப்பட்டு வருகின்றனராம்.

மேலும் புலிகளின் தாக்குதல்களை முறியடிக்கும் வகையில், படையினரை முழு உஷார்நிலையில் இருக்குமாறும் இராணுவத் தலைமைப்பீடம் உத்தரவிட்டுள்ளது. -இ

## அரசுக்கு எதிராக தெற்கில் பத்திரிகைகள் போர்க்குரல்

(கொழும்பு)

இலங்கை அரசு பத்திரிகை சுதந்திரத்தை நசுக்கிறது என்ற குற்றச்சாட்டை நேரில் கண்டு விசாரிக்க வந்துள்ள 'ஆட்டிக்கிள் 19' என்னும் பன்னாட்டு மனித உரிமைக்குழு, தற்போது இலங்கையில் தங்கியிருக்கும்போதே அரசு, பத்திரிகைகள் நாடாளுமன்ற விவாதங்களை அப்படியே பிரசுரிப்பதை தடைசெய்யவேண்டிய நிலை ஏற்பட்டதாக அரசு அதிகாரிகளுக்கு தற்போது சமி

(4ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### புத்தகங்கள் விற்பனை

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு இந்திய நாவல்கள், சுக்சநெறிகள், ஆங்கிலதமிழ் வெஞ்சியம் மதுரூஸ் டிக்செநெறி) ஸ்ரீகாந்தா புத்தகசாலை, நல்லூர்.

(ஏ-3277)

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsule கிடைக்குமிடம் எஸ். கே. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (இ-111)

— பெயர் மாற்றம் —

யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்

G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறை வீதி,
— யாழ்ப்பாணம். —

(சி 330)


# உலக கிண்ண உதைபந்தாட்டம் பிரேஸில் தகுதியிழந்தது

(நியூயோர்க்)

1994ம் ஆண்டு நடைபெற விருக்கும் உலக கிண்ண உதைபந்தாட்டப்போட்டியில் பங்குபற்றும் தகுதியை பிரேஸில் நாடு இம்முறை இழந்து விட்டது.

மூன்று தடவைகள் உலக உதைபந்தாட்டக் கிண்ணத்தை வென்றெடுத்து உலக உதைபந்தாட்டச் சரித்திரத்தில் தனக்கென ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்துக் கொண்ட பிரேஸில் இம்முறை உலக உதை பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழந்தது. உலக உதை பந்தாட்ட ரசிகர்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

சென்ற திங்கட்கிழமை இரவு பிரேஸிலுக்கும் பொலிவியாவுக்குமிடையில் நடைபெற்ற உலக உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்கான தகுதி காணும் கடைசிப்போட்டியில் பிரேஸில் தோல்வியடைந்தது. இப் போட்டியில் பொலிவியா 2-0 கோல்களால் பிரேஸிலை வெற்றி பெற்றது.

உதைபந்தாட்டச் சரித்திரத்தில் உலக உதைபந்தாட்டப்போட்டியில் பிரேஸில் கலந்து கொள்ள முடியாது போனது இதுவே முதல் தடவையாகும். (வி-கி)

### யாழ்.குடா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கிலும்- கிழக்கிலும் படைபலத்தை பிரயோகிக்காமல் சமாதானத்தை நிலைநாட்டுவதும், சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்துவதுமே அரசின் நோக்கமாகும்.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண பதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கைகள் யாவும் துர்ரதிஷ்ட வசமாக செவிசாய்க்கப்படவில்லை.

கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகம் படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் இறுதிக்குள் கிழக்கில் வழமை நிலையை ஏற்படுத்த முடியுமென அரசு நம்புகிறது. வவுனியாவில் அன்றாட வாழ்க்கை வழமைக்கு திரும்பியுள்ளது.

வடக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவும், சிவில் நிர்வாகத்தை மீண்டும் நிலைநிறுத்தவும் ஆயுதப்படையினரும், பொலிசாரும் ஏனையோரும் நடவடிக்கை எடுத்துவருகின்றனர். நெருக்கடி காணப்படும் பகுதிகளில் வழமை நிலையை ஏற்படுத்த அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது எனவும் கூறினார் (கி-கீ)

## நினைவாலயம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு சமரின்போது வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக கொடிகாமத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயம் நாளை மறுதினம் 31ம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் விடுதலைப் புலிப் பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள். -ம-ரி

## விளையாட்டுப் போட்டி

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி ஜனசக்தி சனசமூகநிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் வருடாந்த நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை திரு. பொ. வடிவேலு தலைமையில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தர டிவகலாலரவும் சிறப்பு விருந்தினராக வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் திரு. இ. கெங்கராசாவும் கலந்து கொள்வார்கள். -139-கி


வெளிவந்துவிட்டது!

# அறிவுக் களஞ்சியம் 14

ரூபா3000/- பரிசுநிலான சிறப்புப் பொது அறிவுப் போட்டி வினாக்களும், போட்டி முடிவுகளும் இந்த இதழிலும் வெளிவந்துள்ளது!

★ தென்மராட்சிப் பகுதியிலுள்ள வாசகர்களும், விற்பனையாளர்களும், இந்த இதழ் தொடர்களை பின்வரும் முகவரியிலும் பிரதிகளைப் பெறலாம்.

சிவம் மெடிக்கல்ஸ்
கண்டி வீதி, சாவகச்சேரி
(எ-3282)

## தேவை

பொலிகண்டி கந்தவன ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கு வேலி போட 500—1000 முக்கிளுவை- கதியால் தேவை. வைத்திருப்பவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு தங்கள் விலை விபரங்களை விண்ணப்பிக்கவும்.

ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை
(எ-3283)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# வவுனியா - அம்பாறையில் ரூபா ஒன்றேகால் கோடி அபிவிருத்திக்கு ஒதுக்கு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதியில் அபிவிருத்தி வேலைகளுக்கென 1 கோடியே 25 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அரசு நேற்று அறிவித்தது.

வவுனியா, மற்றும் அம்பாறைப் பகுதிகளிலேயே இவ்வபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் குழாய்க் கிணறு தோண்டுதல் மற்றும் விவசாய அபிவிருத்திக்கென இப்பணம்செலவிடப்படும் எனவும் அரசு மேலும் அறிவித்துள்ளது. (உ-கி)

# கிழக்கு பல்கலை. ஊழியர் வேலைநிறுத்தத்திற்கு முடிவு

(மட்டக்களப்பு)

ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கப்படாத பட்சத்தில் அடையாளவேலைநிறுத்தத்தில் குதிக்கப்போவதாக கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர்.

இப் பல்கலைக்கழக ஊழியர்களின் 8வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் பல்கலைக் கழக மண்டபத்தில் நடைபெற்றபோது பொது நிர்வாக மாகாண அமைச்சின் 7/91 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைய ஊக்குவிப்பு அலவன்ஸ் உடனடியாக வழங்கப்படவேண்டும் இல்லையேல் ஆரம்பப் போராட்டமாக ஒரு மணி நேர அடையாள வேலைநிறுத்தத்திலும் அதனைத் தொடர்ந்து ஒருநாள் வேலை நிறுத்தத்திலும் ஈடுபடுவதென்று இவர்கள் முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (71)

# 'ஜெ' உண்ணாவிரதம் தேர்தலுக்கு பிரசாரம்

(சென்னை)

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ராணிப்பேட்டை சட்டப் பேரவை, பழநி நாடாளுமன்ற இடைத் தேர்தல்களுக்கான பிரசாரத்தின் போது முதல்வர் ஜெயலலிதா உண்ணாவிரதமிருந்தமை தொடர்பான வீடியோ படக்காட்சிகளைப் பயன்படுத்தக்கூடுமென தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

காவிரிநீர்ப்பிரச்சினை தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா உண்ணாவிரதமிருந்த வீடியோபடக்காட்சிகளை பிரசாரத்திற்குப் பயன்படுத்துவதன் மூலம் அ. தி. மு. க. வின் செல்வாக்கு அதிகரிக்கலாம் என்ற அச்சத்திலேயே வாழப்பாடி ராமமூர்த்தி மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்திருக்கலாம் எனக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (உ-கி)

### வலிகாமத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தம்பு, சுழிபுரம் ஆகிய இடங்களுக்கு மேலாகவும் இக் ஹெலி பறந்து நோட்டம் விட்டுச் சென்றது.

இதேவேளை காரைநகர் வலந்தலைப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று காலை 6-30 மணியளவில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயத்திற்குப் பின்புறத்தில் இந்த ஷெல்கள் விழுந்து வெடித்ததாக அறியப்படுகின்றது. (72-சி)

### இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய - மாநில அரசுகள் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுமிருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் கூறியுள்ளார். இலங்கை படையினரால் தமிழக மீனவர்கள் இவ்வாறு தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். (கி)

### ராஜினா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிதடிகளைப் பெற்று வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டை அவர் நிராகரித்துள்ளார்.

நேற்று சிங்கள சட்டமாணவர்கள் சங்கத்தின் மாதிரிப் பாராளுமன்றத்திலேயே தன் மீது சுமத்தப்பட்டுள்ள மேற்கண்ட குற்றச்சாட்டை மறுதலித்து திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா பேசினார்.

மாதிரிப் பாராளுமன்றத்தில் ஐனாதிபதி ஆட்சி முறைக்கு எதிரான பலர் கண்டனங்கள் தெரிவித்தனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம-சி)

### ராவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களிப்போரை திசை திருப்ப இறுதிநாளில் மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகளில் சுப்பிரமணியசுவாமி ஈடுபட்டு ஜனதா தள் உறுப்பினர்கள் 7 பேரை அரசுக்கு சாதகமாக வாக்களிக்க வைத்ததுடன் எதிரணியைச் சேர்ந்த 7 பேரை நாடாளுமன்றில் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இருக்கச் செய்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)


திடீரென ரசம் அருந்த வேண்டும் அல்லது உணவுடன் கலந்து உண்ணவேண்டும் எனத் தோன்றுகின்றதா?

அரைக்கத் தேவையில்லை, கொதிக்கத் தேவையில்லை

இதோ

"ஒரு நிமிடத்தில் சுவைமிகு ரசம்"

தயார்

ஆச்சரியமாக உள்ளதா? ஆம்

Tasty! யின் புதிய அறிமுகம்

# "திடீர் ரசம்"

(INSTANT RASAM)

(இரசாயன சேர்க்கைகள் அற்றது)

1 தேக்கரண்டி திடீர் ரசக்கிறீமை 1 டம்ளர் சுடுநீரில் கலக்கும்போது சுவையான ரசம் உங்களுக்குக் கிடைக்கும்.

100 கிராம் பொதியின் விலை ரூ. 17/50 மட்டுமே

இன்றே உங்கள் வியாபாரிகளிடம் கேட்டு வாங்கிப் பாவியுங்கள்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(எ3285)

# 4வது பிறந்ததின வாழ்த்து

## செல்வன் கு. கிரிதரன்

"குமரகிரி" கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வவுனியா, மன்னார் வீதியில் வசிப்பவர்களுமாகிய திரு இ. குமாரகுலசூரியன் (I. P. W. அலுவலகம், இலங்கை புகையிரதப்பகுதி - வவுனியா), திருமதி ஸ்ரீமதனி தம்பதிகளின் புதல்வன் செல்வன் கிரிதரன் தனது நாலாவது பிறந்ததினத்தை இன்று கொண்டாடுகிறார்.

கிரிதரன் நலம் பெற்று வாழ அப்பா, அம்மா, சகோதர சகோதரிகளுடன் மற்றும் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

(எ-3287)

## மணிவாசகம்

மனிதன் தன் சொந்த ஆத்மாவை இழந்து விட்டு உலகம் முழுவதையும் பெற்றாலும் அவன் அடையும் லாபம் என்ன? அல்லது தன் ஆத்மாவுக்கு ஈடாக எதைக் கொடுப்பான்? — பைபிள்

# பத்திரிகை சுதந்திரத்திற்கு அரசு மீண்டும் சாவுமணி

(கொழும்பு)

பத்திரிகைச் சுதந்திரத்திற்கு மீண்டும் சாவுமணியடிப்பதற்கான நடவடிக்கைகளில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தலைமையிலான அரசு ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாசா காலத்தில் பத்திரிகைச் சுதந்திரத்தைச் சூழ்ந்திருந்த கொடிய இருள் மீண்டும் தலைகாட்ட ஆரம்பமாகியிருப்பதாக வெகுஜன தொடர்பு சாதனங்களைச் சேர்ந்த பலரும் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற விவாதங்களின் போது செய்தியாளர்கள் செய்திகளைத் தொகுப்பது தொடர்பாக அரசு புதிய நடைமுறைகளைக் கொண்டுவர உள்ளது.

நாடாளுமன்ற விவாதங்களைப் பொதுமக்களுக்கு அறிவிக்காமல் இருப்பதற்கு அரசு கையாளவுள்ள ஒரு தந்திர முயற்சி இதுவெனக் கூறப்படுகிறது.

நாடாளுமன்ற விவாதங்களின் போது ஆளும் கட்சி பல வினவுகள், குற்றம் குறைகள் எதிர்க்கட்சிகள் மூலம் விமர்சிக்கப்படும். அவற்றை பொதுமக்கள் பத்திரிகைகள் வாயிலாக வாசிக்கும்போது அதனால் அரசுக்கு பாதகநிலை ஏற்படுவதாலேயே அரசு இத்தகைய ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-வ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

இன்று நல்லூர் ப.நோ.கூ. சங்கக் கிளைகள் மூலம் பாவனையாளர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றுக்கு 18 வீதம் விநியோகிக்கப்படுகிறது. -இ

## வரலக்ஷ்மி விரதம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீவரதராசப் பெருமாள் தேவஸ்தானத்தில் வரலக்ஷ்மி விரதம் நாளை வெள்ளிக்கிழமை அநுஷ்டிக்கப்படவுள்ளது. அன்று மாலை 3 மணியிலிருந்து மங்கல காப்பு அணிதல் ஆரம்பமாகும்.

# நமது நோக்கு

## 'சுப்பசொனிக்' கொடூரம்

பௌத்தம் பாதுகாக்கப்படும். இறீலங்கா அரசின் 'சுப்பசொனிக்' விமானங்கள் பாலகர்களைப் பதம் பார்த்துவிட்டன.

ஊரடங்கு வேளையிலா? இல்லவேயில்லை; பட்டப் பகல்; பாலகர்கள் பரீட்சைக்காகப் பாடசாலைக்குச் செல்லும் வேளை; குண்டுவீச்சு விமானங்கள் கோரத் தாண்டவம் ஆடியுள்ளன!

பாலகர்கள் சிலர் பாதுகாப்பான இடம் எனக் கோவில் ஒன்றில் பதுங்கினார்கள்; குண்டுச் சிதறல்கள் அவர்களையும் தாக்கியிருக்கிறது.

கோவிலா? 'அவர்களுக்கு' ஏது கவலை? 'நக்குற மாட்டிற்குச் செக்கென்ன, சிவலிங்கம் என்ன?

'மண்கிண்டிமலை அனுபவம்' ஆத்திரத்தைக் கிளறியிருக்கிறது. ஆனால் இராணுவத்திற்கு கட்டுப்பாடுகள், வரன்முறைகள் இல்லையா?

களைபிடுங்குவதாகக் கூறிக் கொண்டு பயிர்களையா அழிப்பது?

இதேவேளை – தென்னிலங்கையிலிருந்து வரும் செய்தி என்ன? பிரபலமான எதிர்க்கட்சி அரசியல்வாதி ஒருவர் குண்டு துளைக்காத கார் இறக்குமதி செய்ய முயற்சிக்கின்றார். அமைச்சர் ஒருவரும் இத்தகைய கார் பெறுவதில் அக்கறை கொண்டுள்ளாராம்!

ஆனால் இங்கே – அப்பாவிப் பொதுமக்கள், பாடசாலை செல்லும் சிறுவர்கள், பாதுகாப்பு பகுதி தமது நாளாந்தக் கடமைகளுக்குச் செல்ல முடியாத நிலை உருவாகுவதில் என்ன நியாயம் இருக்கின்றது?

இதைவிட, குண்டுவீச்சு நடந்த இடங்களில் மருத்துவமனையும் தப்பவில்லை. தெல்லிப்பளை மருத்துவமனையிலிருந்த இரு நோயாளிகளும் காயப்பட்டார்கள்; கர்ப்பிணிகள் உட்பட நோயாளிகளும், ஊழியர்களும் பதட்டமடைந்து தப்பி ஓடியுள்ளார்கள்.

பாடசாலை, கோவில், மருத்துவமனை – இவைகள்தான் இலக்குகளா? சர்வதேசப் போர் நியதிகள் காற்றிலே பறக்கின்றன!

மேலும், ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிலைய அலுவலகத்திற்கு அருகில்தான் பாடசாலைச் சிறுவர்கள் பலியாகியுள்ளார்கள்!

வெளிநாட்டுக் கடன் வசதிகளைப்பெறும் காலங்களில் அமைதியாக இருந்துவிட்டு, கடன் பெற்றதும் அனர்த்தங்கள் தொடருகின்றன.

உலகப் பொது அபிப்பிராயம் இவற்றைக் கவனத்தில் எடுக்கும் என நம்புகிறோம்!

சட்டம், ஒழுங்கு சீர்குலைவு

# பழனி, ராணிப்பேட்டையில் தேர்தல் நடத்த முடியாது

(சென்னை)

தமிழ்நாட்டில் இப்போதுள்ள சட்டம் ஒழுங்குநிலைமை பழனி லோகசபா தொகுதியிலும், ராணிப்பேட்டை சட்டப்பேரவைத் தொகுதியிலும் நேர்மையாகவும் தேர்தல் நடத்துவதற்கு உகந்ததாக இல்லை என்று தேர்தல்கமிஷன் அறிவித்துள்ளது.

இந்தத் தொகுதிகளில் மத்திய அரசு உடனடியாக மத்திய பொலிஸ் படைகளை போதுமான அளவிற்கு நிறுத்த வேண்டும். இந்தப் பணி உடனே தொடங்கி இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் முடிவடைய வேண்டும் என்றும் தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது.

மத்திய படைகளை முழுமையான அளவில் பயனுள்ளவரையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு தமிழக அரசையும் தேர்தல் கமிஷன் கேட்டுள்ளது. (பி)

## பிரதமர் ராவுக்கு இப்படியொரு சோதனை

(புதுடில்லி)

தன்னிடமிருந்து ஒரு கோடி ரூபாவை வாங்கவில்லையென பிரதமர் நரசிம்மராவ் தொடர்ந்து மறுத்து வந்தால் அவர், பொய் பேசுவதை கண்டுபிடிக்கும் கருவியின் பரிசோதனைக்கு தன்னை உட்படுத்த தயாரா என பங்கு மார்க்கட் ஊழல் பேர்வழி ஹர்ஸத் மேத்தா சவால் விட்டுள்ளார்.

பொய் பேசுவதை கண்டுபிடிக்கும் கருவியை நடத்தி வரும் நிறுவனத்தை சார்ந்த பிரிட்டனின் 'சரத்' என்பவர் ஹர்ஸத் மேத்தாவுடன் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டார்.

ஜூலை 4ம் திகதி மேத்தா மீது நடாத்திய இச் சோதனையின் படி அவர் பொய் பேசவில்லை என 'சரத்' சொன்னார். (பி)

## நாதஸ்வர கலைஞருக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

மைதடியூர் நாதஸ்வர கலைஞர் திரு. கு. சத்தியநாதனைக் கௌரவித்து சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸ்தானம் நாளை 30ம் திகதி பாராட்டு விழாவொன்றை மேற்படி ஆலயத்தில் நடத்தவுள்ளது.

சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நாதஸ்வரக் கலைஞருக்கு பொன்னாடை போர்த்தல், தங்கப் பதக்கம், கௌரவப்பட்டம், பாராட்டுப்பத்திரம் போன்றவையும் வழங்கப்படவுள்ளன. –ரி

## இராசிபலன்

29-07-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஆடி 14)

ஏகாதசி மாலை 6-40 வரை, கேட்டை பி. இ. 4-43 வரை இராகுகாலம் நண்பகல் 1-33 முதல் 3-03 வரை, சுபநேரம் காலை 7-33 முதல் 9-03வரை ஏகாதசி விரதம், சித்த யோகம்;

மேஷம்: மன சோர்வு, உடல்நல பாதிப்பு, காரியத் தடை.

இடபம்: பொதுநலப்பணி, பயண நன்மை, குடும்ப கௌரவம்.

மிதுனம்: தொழில் சிறப்பு திடீர் செலவு, விருந்து.

கடகம்: அமைதிக் குறைவு, விரோதிகள் தொல்லை, அலைச்சல்.

சிம்மம்: கொள்கை முரண்பாடு, தவறான பேச்சு, வெறுப்பு.

கன்னி: புத்திரர் சந்தோஷம், தொழில் லாபம், உறவினர் வருகை.

துலாம்: வேலைக் கஷ்டம், கணவர் நச்சரிப்பு, மனச் சுமை.

விருச்சிகம்: மேலோர் நட்பு, வைராக்கியம், தெய்வ பக்தி.

தனுசு: திண்டாட்டம், தொழில் நஷ்டம், அகால உணவு.

மகரம்: குடும்ப ஒற்றுமை, நண்பர் உதவி, நற்செய்தி.

கும்பம்: தருமம் செய்தல், இலாப நன்மை, காரியம் கைகூடல்.

மீனம்: தொழில் பகை, ஏமாற்றம், அலைந்து திரிதல்.

ஜோஸ்யர்

பாடசாலை நிர்வாகத்தில்

# மாணவர் அமைப்புக்களின் அனுமதியின்றி தலையிட முடியாது"

(யாழ்ப்பாணம்)

"மாணவர்கள் சம்பந்தப்பட்ட எந்த ஒரு நடவடிக்கையிலும் அல்லது பாடசாலையுடன் தொடர்புடைய பாடசாலை நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட எந்த அலுவல்களிலும், இயக்கம் சார்ந்த அல்லது இயக்கம் சாராத எந்த ஒரு அமைப்பும் அந்தந்தக் கோட்டத்துக்குப் பொறுப்பான மாணவர் அமைப்பு பொறுப்பாளரின் அனுசரணையுடனேயே தலையிடவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. பார்த்தீபன் இவ்வாறு கூறியுள்ளார்.

மருதனாமடம் கோட்டத்தை சேர்ந்த பாடசாலை அதிபர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார்.

மருதனாமடம் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பார்த்திபன் மேலும் கூறியதாவது:

எமது இயக்கத்தின் பெயரைக் கூறி பாடசாலை நிர்வாகத்தில் தலையிடவும், மாணவர்களை பயன்படுத்தவும் கடந்த காலங்களில் முனைந்தமை எமக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எமது இயக்கத்தை சாட்டி பல ஒழுங்கீனமான நடவடிக்கைகளும் நடைபெற்றிருப்பதாக அறிகிறோம். எமது இயக்கத்துக்கு களங்கம் ஏற்படாத வகையில் எமது நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், ஒழுங்கீனங்களுக்கு பாடசாலை அதிபர்கள் துணை போகாதிருக்கவும் நாம் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

எனவே எதிர்காலங்களில் பாடசாலையுடன் தொடர்புடைய எந்த விதமான தலையீடுகள், நடவடிக்கைகளில் யார் ஈடுபட்டாலும் எமது மாணவர் அமைப்பின் அனுமதியுடனேயே நடாத்துகொள்ள வேண்டும்.

பாடசாலை அதிபர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ளவும் ஒழுங்கீனங்கள் நடைபெறாதிருக்கவும் பொருட்கள் கொடுக்கல் வாங்கல் பற்றிய பதிவேடுகளை பேணுதல்வேண்டும். அது எமது நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த உதவியாக அமையும். (109)

## நல்லூர் ஆலயத்தில் தொண்டர் சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய உற்சவத்தை தரிசிக்கும் பக்தர்களின் பலவித நலன்களை, வசதிகளைக் கவனிக்கவென 'நல்லூர் முருகன் வழிபாட்டாளர் நலன் சேவைப்பந்தல்' அரிய சேவையினை உற்சவகால ஆரம்பத்திலிருந்து செய்துவருகிறது.

நல்லூர் ஆலய தெற்கு வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் இப்பந்தல் சேவை இரவு பகலாக பக்தர்களுக்கு சேவை புரிந்துவருகிறது.

காலை வேளைகளில் இங்கு வரும் அடியார்களுக்கு தேநீர் வழங்குவதோடு, பகல் வேளையில் அன்னதானமும் திருவிழா ஆரம்பத்திலிருந்து இப்பந்தல் அமைப்பாளர்கள் செய்துவருகிறார்கள். தினமும் இப்பந்தலில் யோகர் சுவாமிகளின் மகளிர் ஆச்சிரமப் பெண்களால் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை முற்றோதல் நடைபெற்று வருகின்றன. வடபகுதியிலுள்ள நூற்றி எண்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களிடமிருந்து பிடி அரிசியும் நிதி உதவியும் சேகரித்து இத் தெய்வீக திருப்பணியை செய்து வருகின்றார்கள்.

முன்னைநாள் வட கிழக்கு மற்றும் மலைநாட்டு சர்வோதய அமைப்பாளரான திரு. க. திருநாவுக்கரசு இதன் அறங்காவலராகப்பணி புரிந்து வருகிறார். (162-இ)

## கந்தன் வரக்கண்டு களிகொள்வாரே

பாரதிரும் மணியோசை எழுந்தே ஓங்க
பனிவேதம் வாத்தியம் பரந்தே வீங்க
ஊரதிரும் பக்தர்குரல் உயர்ந்தே தாங்க
உருகியவன் கழல்பாடிக் கண்ணீர் தேங்க
நாரதரும் தேவரும்நல் வாழ்த்துக் கூற
நலமருள ஈசுபுறமும் நாரியர்கள் சூழ
சூரதிரும் வேற்கைவே லவனும் நல்லூர்க்
கந்தன்வரக் கண்டுள்ளம் களிகொள் வாரே.

— "முருகநேசன்"

(இன்று நல்லூர் கந்தன் 6ம் நாள் உற்சவம்)

## வடக்கு - கிழக்கு யுத்தத்தால்
# இல. கைத்தொழில் நாடாகும் வாய்ப்பை இழக்கிறது!

(கொழும்பு)

இரண்டாயிரம் ஆண்டளவில் இலங்கை ஒரு கைத்தொழில் நாடு என்ற அந்தஸ்தை பெறக் கூடியதாக இருந்த போதும் அது வடக்கு கிழக்கு யுத்தத்தினால் சாத்திய மற்றுப் போயுள்ளது

இவ்வாறு வர்த்தக வாணிப மன்றத்தில் நேற்று உரையாற்றிய மன்றத்தலைவர் ஹரேந்திர எச். டி. சில்வா கூறினார். அவர் மேலும் கூறுகையில்; வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படுவதற்கு முக்கிய காரணம் வடக்கு கிழக்கு யுத்தமேயாகும் என்றும் வரவு செலவு திட்ட பற்றாக்குறையினால் பண வீக்கம், உயர்ந்த வட்டி வீதம் ஏற்பட்டுள்ளன என்றும் கூறினார்.

வடக்கு-கிழக்கில் அமைதி ஏற்படாவிடில் பொருளாதார முன்னேற்றம் மந்த நிலையிலேயே செல்லும் எனவும் அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரும் கலந்து கொண்டார். (கே-இ)

## தபால்களை போடவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து நாளை வெள்ளிக்கிழமை கொழும்பிற்கு புறப்படும் 'குமண' கப்பல் மூலமாக தபால்கள் அனுப்பப்பட இருப்பதால் பொதுமக்கள் நேரகாலத்துடன் தங்கள் கடிதங்களை அஞ்சலில் சேர்க்கும்படி வேண்டப்படுகின்றனர். (சி)

## யாழ். மாவட்டத்தில்
# வறிய குடும்பங்களின் விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

உழைப்பாளரை இழந்து, வறுமை நிலையில் தமது குழந்தைகளைப் பராமரிக்கமுடியாத நிலையில் உள்ள குடும்பங்கள் பற்றிய விபரத்தினை அடுத்த மாதம் 6ம் திகதிக்கு முன்னர், யாழ். செயலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேசச் செயலர்களுக்கும் மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

வன்செயல் அல்லது இயற்கை மரணம், காணாமற்போதல், வன்செயல் அல்லது வேறு காரணங்களால் உழைக்கும் ஆற்றலை இழத்தல், உழைப்பாளரால் கைவிடப்பட்டிருத்தல் என்ற அடிப்படையில் உழைப்பாளரின் வருமானத்தை மேலைந்த காரணங்களில் ஒன்றினால் இழந்து, குழந்தைகளைப் பராமரிக்க முடியாத நிலையில் உள்ள வறிய குடும்பங்களின் விபரங்களை, கிராமசேவகர்கள் ஊடாகத் திரட்டிப் பிரதேச செயலர்கள் 06-08-93க்கு முன்னர் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ)

## நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வைத்திய சிகிச்சைக்காகக் கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், அவர்களுடன் கூடச் செல்பவர்களையும் தங்களுக்கு இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு யாழ். பொது வைத்தியசாலைக்கு வருமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார். (சி)

# குறிகாட்டுவானில் கடற்படை முகாம்

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு குறிகாட்டுவான் துறையில் ஸ்ரீலங்கா கடற்படை முகாம் ஒன்று அமைத்துள்ளதாகவும், புங்குடுதீவில் இருந்து நயினாதீவுக்குச் செல்பவர்கள், இந்த முகாமில் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே படகில் ஏறிப் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகிறார்களாம்.

இவர்கள் மீண்டும் நயினாதீவில் உள்ள கடற்படை முகாமிலும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே நயினாதீவுக்குள் காலடி எடுத்து வைக்கமுடிகிறது என்றும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (10:-சி)

## இராணுவம்
# ஆத்திரமுற்ற நிலையில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

மணலாற்றில் பெரும் இழப்பைச் சந்தித்த இராணுவம் ஆத்திரமுற்ற நிலையில் யாழ். குடாவில் அகோர விமானத் தாக்குதலை நடாத்தி வருவதாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

புலிகள் மீது தாக்குதலை நடாத்துகிறோம் எனக்கூறி அப்பாவிப் பொதுமக்கள் மீதே நேற்றுமுன்தினம் படை விமானங்கள் தாக்குதலை நடாத்தியுள்ளதாக ராய்ட்டர் செய்தி தெரிவித்தது. (சி)

## கிரிக்கெட்
# இலங்கை ஸ்திர நிலையில் இந்தியாவுக்கு சரிவு

(கொழும்பு)

இலங்கைக்கும்-இந்தியாவுக்கும் இடையில் கொழும்பில் நடைபெறும் 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-வது நாள் ஆட்டம் முடிவடையும் போது இலங்கை 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 200 ஓட்டங்களைப் பெற்றது.

4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 304 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்தியா நேற்று 2-ம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்தது. மதிய இடைவேளைக்கு முன் இந்தியா சகல விக்கெட்டுக்களையும் இழந்து 366 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இந்தியா தனது மிகுதி 6 விக்கெட்டுகளையும் 66 ஓட்டங்களுக்குள் இழந்தது.

இலங்கை ஒரு கட்டத்தில் 4-விக்கெட்டுகளை இழந்து 96-ஓட்டங்களை பெற்றிருந்தது. இதன் பின்பு அருச்சுனா ரணதுங்கவும், ஹஸன் திலகரட்ணவும் நிதானமாக ஆடி ஓட்டங்களின் எண்ணிக்கையை 200ஆக உயர்த்தினார்கள். அருச்சுனா ரணதுங்கா 82 ஓட்டங்களுடனும், ஹஸன் திலகரட்ண 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருக்கின்றார்கள். மகாநாம-22, குருசிங்கா-04, ஹத்துருசிங்கா-37, அரவிந்த டி சில்வா-22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். (வி-இ)


## மரண அறிவித்தல்

### சரவணையூர்
### சின்னத்துரை நாகம்மா

சரவணையூர் மேற்கு நகைக்கடை மு. சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவி நாகம்மா நேற்று காலமானார். அன்னார் மகாலிங்கம் (சோதிடர்), கணேசலிங்கம் (நுளுணுஸ் யாழ்ப்பாணம்), சண்முகலிங்கம், சபாலிங்கம் இராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் தற்பராதேவி, லோகேஸ்வரி, லீலாவதி, வவி, சோமசேகரம் (ஓய்வுபெற்ற வருமானவரி உத்தியோகஸ்தர், தற்போது 'ஈழநாடு' யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 45, யமுனாவீதி, நல்லூரிலுள்ள அவர்களது இல்லத்தில் பகல் 1-00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மு. சின்னத்துரை (கணவர்)

(எ-3288)


# லெபனானில் இஸ்ரேல் கொடூரத் தாக்குதல் 4 லட். முஸ்லிம்கள் அகதிகள்

(பெய்ரூட்)

லெபனானின் தென்பகுதியில் கடுமையான தாக்குதலை நடத்திவரும் இஸ்ரேல் லெபனானின் வேறு சில பகுதிகளிலும் புதிய தாக்குதலை நடத்தி முழு அளவிலான போர் ஒன்றின் மூலம் ஹிஸ்புல்லா போராளிகளை அடக்க திட்டமிட்டு இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் ரபின் கூறியுள்ளார்.

இஸ்ரேல் தொடர்ந்து தாக்குவதால் லெபனானின் கிராம மக்கள் 4 லட்சம் பேர் வீடு வாசல்களைத் துறந்து வெளியேறி வருகிறார்கள். அகதிகளாக வெளியேறும் இம்மக்கள் மீண்டும் திரும்பி வராத வகையில் இஸ்ரேல் கொடூரமான குண்டுத் தாக்குதல்களை நடாத்தி வருகிறது.

கடந்த 4 நாட்களாக இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 100 பேர் பலியாகியதாக செய்திகள் தெரிவிக்கின்றன!

இதேவேளை இப்பகுதிகளில் கடுமையான தாக்குதலை நடாத்தும் இஸ்ரேலை பிரான்ஸ் கண்டித்ததோடு உடனடியாக தாக்குதல்களை நிறுத்துமாறு வேண்டிக் கொண்டுள்ளது. (கே-இ)

## அரசுக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டமான நிலையேற்பட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

தான் பார்த்ததை, கேட்டதை அப்படியே வெளியிட ஒரு பத்திரிகையாளருக்குள்ள உரிமைக்கும் தாம் பேசுவதையெல்லாம் அப்படியே பத்திரிகைகள் எல்லாம் வெளியிடக் கூடாது எனக் கூறும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்பத்திற்குமிடையே இப்போது சர்ச்சை எழுந்துள்ளது.

பத்திரிகை ஆசிரியர்களுக்கு ஆதரவு தெரிவித்து கடிதங்கள் பலகுவிகின்றன. பத்திரிகைகளும் செய்திகளை அப்பட்டமாக வெளியிடுவதால் எதிரணியினரும் பயனடைகின்றனர். இதை அரசு நசுக்க முயல்வதாக எதிர்ப்பும் முறுகல்நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது. (கே-இ)

## மீண்டும் ஒரு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருமலை மாவட்டத்தில் சுமிந்திரா இராணுவமுகாமிற்கும் சாம்பல்பிட்டி இராணுவ முகாமிற்கும் இடையிலுள்ள பிரதான வீதியில் இரவுக் காவல் புரிந்துவிட்டு அவ்விடத்தில் நின்ற 10க்கும் மேற்பட்ட படையினர் மீது இத்திடீர் தாக்குதலை புலிகள் மேற்கொண்டனர்.

இத் தாக்குதலினால் ஆறு படையினர் ஸ்தலத்திலே பலியாகினர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர். இதன்போது புலிகள் தரப்பில் சேதமெதுவும் ஏற்படவில்லை.

இத்தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ஏ. கே இலகு இயந்திரத் துப்பாக்கி-1, 203ரக எறிகணை செலுத்தி-1, ரி 56 ரகத் துப்பாக்கிகள்-4, ஏ. கே இலகு இயந்திரத் துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள்-5, தொடர் ரவைகள்-500, ரி.56 ரக ரவைக் கூடுகள்-11, 203 ரக ஏவுகணைகள்-12, ரி.81 ரக ரவைக் கூடுகள்-5, நடுத்தர ரவைகள்-460, தொலைத் தொடர்புச் சாதனம்-1, ஏ.கே ரவைக் கூடு தாங்கிகள்-4 சப்பாத்துகள்-5 சோடி, தொப்பி-4, மழைக்கவசம்-3, கத்தி-1, இராணுவப் பட்டி-1. -இ

## யுத்தக்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரான பண்டார பேசுகையில்; தாம் கடந்த மாதம் 13ம் திகதி மேற்கொண்ட சாகும்வரையான உண்ணாவிரதத்தினால் பலரின் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளதாகவும், இருந்த போதும் தாம் விடுவிக்கப்பட வேண்டும், அதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயேமீண்டும் சாகும் வரையான உண்ணாவிரதத்தை மேற்கொள்வதாகவும் கூறினார்.

மேலும் தாம் தொடர்ந்தும் யுத்தக்கைதிகளாக இருக்க தயாராக இல்லையெனவும் தாம் விடுவிக்கப்படவேண்டும் இல்லையேல் உண்ணாவிரதமிருந்து இறந்துவிடவேண்டும் என்பதே முடிவாகும் என்றார்.

யுத்தக் கைதிகள் 33 பேரும் விடுவிக்கப்படுவர் என்ற உடன்பாடு விடுதலைப் புலிகளுக்கும்- அரசுக்குமிடையில் ஏற்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டாலொழிய இந்த உண்ணாவிரதத்தைக் கைவிடப்போவதில்லை. முன்னர் அரசு தரப்பினர் தெரிவித்த உறுதிமொழிகளால் ஏமாறியதுபோல் இம்முறை ஏமாறப்போவதில்லை. தாம் விரைவில் விடுவிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையில் இருப்பதாகவும் பண்டார மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தமது பிள்ளைகள் உண்ணாவிரதம் இருப்பதால் கவலை கொண்டுள்ளதாகவும் அவர்கள் விடுவிக்கப்படுவார்களா என்பதுபற்றி தற்போது ஒன்றும் கூற இயலாது எனவும் யுத்தக் கைதிகளின் உறவினர் பலர் கருத்துத் தெரிவித்தனர். (கே-இ)

## படையினர்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

உடல்கள் சிதைந்த நிலையில் இருந்ததால் அவற்றைப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தபின், புலிகள் சடலங்களை எரித்துவிட்டார்கள் எனவும் இராணுவம் கூறியுள்ளது.

புலிகள் இராணுவத்தினரின் அடையாளங்களுடன், எரித்த சாம்பலையாவது தம்மிடம் ஒப்படைப்பார்கள் என இராணுவம் நம்பிக்கை தெரிவித்துள்ளதாம். -இ

## ராவ் அரசு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லோக சபையில் மிகக் காரசாரமாக நடைபெற்ற இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்றிரவு 8-25 மணிக்கு இடம்பெற்றது. அரசுக்கு ஆதரவாகவும் பிரேரணைக்கு எதிராகவும் 265 வாக்குகளும், அரசுக்கு எதிராகவும் பிரேரணைக்கு ஆதரவாக 251 வாக்குகளும் கிடைத்துப் பிரேரணை 14 வாக்குகளால் தோல்வியடைந்தது.

இப் பிரேரணைக்கு ஆதரவாக தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகள், பி. ஜே. பி, அ. தி. மு. க. ஜனதா தள் (அஜித்சிங் பிரிவு) வாக்களித்தன. பிரேரணைக்கு எதிராக காங்கிரஸ், ஜனதா தள் (ஏ) சில உறுப்பினர்கள் ஜார்க்கண் முக்தி மோர்ச்சா வாக்களித்தன. சமாஜ்வாதி கட்சி, முஸ்லிம் லீக்கில் எண்மர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

சகல எதிர்க்கட்சிகளும் ஒட்டுமொத்தமாக அரசுக்கு எதிராக வாக்களிக்குமென உறுதியாக நம்பப்பட்டபோதும் காங்கிரஸ் கட்சியினதும் அவர்களது சகாக்களினதும் இறுதிநேர கடும்முயற்சியின் பயனாக ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த 7 பேர் அரசுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். இதேவேளை எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 7 பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இதனால் பிரேரணை தோல்வியுற்றது. ராவ் அரசு தப்பியது. எதிர்க்கட்சிகளுக்கு தோல்வி ஏற்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர் ஒருவரால் இப்பிரேரணை கொண்டுவரப்பட்டதும் தெரிந்ததே. (கே-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால், யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post Office, Sri Lanka under Licence Number B/10336/B